

ஸ்ரீ ஜகத்குரு காஞ்சி காமகோடி பீடாதீச்வர
ஸ்ரீமத் சந்த்ரசேகரேந்தர ஸரஸ்வதி ஸ்வாமிகளின்

# பாத அஷ்டோத்தர சத நாமாவளி



( இலவச வெளியீடு )



உ

ஸ்ரீ ராம ஜெயம்

அன்புடையீர்,

எங்கள் எளிய அழைப்பை ஏற்று **(21-06-2010)** திங்கட்கிழமை அன்று **J. S. திருமண மண்டபத்தில்** நடைபெற்ற சிரஞ்சீவி. **ராமநாதன்** செளபாக்கியவதி. **சந்திரகலா** ஆகியோரின் திருமணத்திற்கு வந்திருந்து மணமக்களை வாழ்த்தி எங்களையும் கெளரவப்படுத்தியதற்கு எங்கள் உளமார்ந்த நன்றி!

திருமதி & திரு. **K. கணேஷ்** திருமதி & திரு. **R. குருராஜன்**

ஸ்ரீ ஜகத்குரு காஞ்சி காமகோடி பீடாதீச்வர

ஸ்ரீமத் சந்த்ரசேகரேந்தர ஸரஸ்வதி ஸ்வாமிகளின்

# பாத அஷ்டோத்தர சத நாமாவளி



**பாலும்தெளி தேனும் பாகும் பருப்பும்**
**இவைநான்கும் கலந்துனக்கு நான் தருவேன்**
**கோலஞ்செய் துங்கக்கரி முகத்து தூமணியே**
**நீ எனக்கு சங்கத்தமிழ் மூன்றும் தா!**

**காஞ்சி காமகோடி பீடாதிபதி**
**ஸ்ரீ சந்திரசேகரந்தர மஹாஸ்வாமிகள்**
**பாதார விந்தங்களில் சமர்ப்பிக்கிறோம்**

**கே. சி. எஸ். தேசிகன் & கம்பெனி,**
18, தஞ்சாவூர் ரோடு, தி.நகர், சென்னை-17.
✆ 28144552, 28144553

First Edition 2009 1000 Copies

தமிழாக்கம் :

வேதாந்த மீமாம்சா சிரோமணி
பாகவத ராமாயண நாராயணீய உபன்யாசகர்
சென்னை சமஸ்கிருத கல்லூரி பேராசிரியர்
ஸ்ரீ கிருஷ்ண பிரேமி ஸ்வாமிகளின் சிஷ்யர்

**பரநூர் ப்ரம்ம ஸ்ரீ நீலபாலசர்மா**

Printed By : Eveready Printers, T.Nagar, Chennai - 600 017. Ph : 42122271

ஸ்ரீ ஜகத்குரு காஞ்சி காமகோடி பீடாதீச்வர
ஸ்ரீமத் சந்த்ரசேகரேந்தர ஸரஸ்வதி ஸ்வாமிகளின்

# பாத அஷ்டோத்தர சத நாமாவளி

1. ஸ்ரீ சந்தரசேகரேந்தர அஸ்மத் ஆசார்யாய — நமோ நம:
   **ஸ்ரீ சந்திரசேகரேந்திரா! எங்கள் குருவே — போற்றி போற்றி!**
2. ஸ்ரீ சந்த்ரமௌளி பாதாப்ஜ மதுபாய — நமோ நம:
   **ஸ்ரீ சந்திரமௌளீஸ்வர சிவனை பூசிப்பவரே — போற்றி போற்றி!**
3. ஆசார்ய பாதாதிஷ்டாநாபிஷிக்தாய — நமோ நம:
   **சங்கர குருபீடத்தில் முடிசூடியவா — போற்றி போற்றி!**
4. ஸர்வக்ஞாசார்ய பகவத் ஸ்வரூபாய — நமோ நம:
   **எல்லாமறிந்த ஆதிசங்கரர் உருவா — போற்றி போற்றி!**
5. அஷ்டாங்க யோகநிஷ்டா கரிஷ்டாய — நமோ நம:
   **அட்டாங்க யோக பெருமை பெற்றவா — போற்றி போற்றி!.**
6. ஸனகாதி மஹாயோகி ஸத்ருசாய — நமோ நம:
   **சனகமுனி பெரும்யோகி ஒப்பானவா — போற்றி போற்றி!**
7. மஹாதேவேந்த்ர ஹஸ்தாப்ஜ ஸஞ்ஜாதாய — நமோ நம:
   **மஹாயோகீந்திர முனி அருள் சீடரே — போற்றி போற்றி!**
8. மஹாயோகி விநிர்பேத்ய மஹத்வாய — நமோ நம:
   **பெரும் யோகிகள் அறியும் பெருமைமிக்கவா — போற்றி போற்றி**
9. காமகோடி மஹாபீடாதீச்வராய — நமோ நம:
   **காமகோடி குருபீடத்தலைவனே — போற்றி போற்றி!**
10. கலிதோஷ நிவ்ருத்யைக காரணாய — நமோ நம:
    **கலியுக குறை நீக்க வல்லவனே — போற்றி போற்றி!**

11. ஸ்ரீ சங்கர பதாம்போஜ சிந்தநாய — நமோ நம:

**ஆதிசங்கரர் திருவடியில் மனம் நிலைத்தாய் — போற்றி போற்றி!**

12. பாரதீக்ருத ஜிஹ்வாக்ர நர்த்தநாய — நமோ நம:

**நாவினிலே கலைமகள் களிநடம் இடும் கலைஞனே — போற்றி போற்றி!**

13. கருணாரஸ கல்லோல கடாக்ஷாய — நமோ நம:

**கருணை அலை அலை மோதும் கண்ணனே — போற்றி போற்றி!**

14. காந்தி நிர்ஜித ஸுர்யேந்து கம்ராபாய — நமோ நம:

**தன்னொளியால் கதிரவன் மதிவென்றாய் — போற்றி போற்றி!**

15. அமந்தானந்தக்ருந் மந்தகமநாய — நமோ நம:

**பேரானந்தம் பெருக்கும் மென்னடையாய் — போற்றி போற்றி!**

16. அத்வைதானந்த பரித சித்ரூபாய — நமோ நம:

**ஞானானந்தம் நிறைந்த ஞானஉருவே — போற்றி போற்றி!**

17. கடீதட லஸச்சாருகாஷாயாய — நமோ நம:

**காவிஉடை மின்னிடும் மென்னிடையாய் — போற்றி போற்றி!**

18. கடாக்ஷமாத்ர மோக்ஷேச்சா ஜனகாய — நமோ நம:

**கடைக்கண்ணால் மோட்சமும் நல்குபவனே — போற்றி போற்றி!**

19. பாஹுதண்டலஸத் வேணுதண்டகாய — நமோ நம:

**தண்டத்தை கைதனிலே ஏந்தியவா — போற்றி போற்றி!**

20. பாலபாகலஸத் பூதிபுண்ட்ரகாய — நமோ நம:

**விரிநுதலில் வெண்ணீறு விளங்கியவா — போற்றி போற்றி!**

21. தரஹாஸ ஸ்புரத் திவ்யமுகாப்ஜாய — நமோ நம:

[illegible] — போற்றி போற்றி!

22. ஸுதாமதுரிமா மஞ்சுபாஷணாய — நமோ நம:

**தேன் அமுது நிகர் இனிய கொஞ்சும் மொழியனே — போற்றி போற்றி!**

23. தபநீய திரஸ்காரி சரீராய — நமோ நம:

**பத்தரைத் தங்கமாய் மிளிர் மேனியவா — போற்றி போற்றி!**

24. தப: ப்ரபாவராஜத் ஸந்நேத்ராய — நமோ நம:

**தவஒளி மிளிர்கின்ற கண்மணியே — போற்றி போற்றி!**

25. ஸங்கீதானந்த ஸந்தோஹ ஸர்வஸ்வாய — நமோ நம:

**சங்கீதப்பேருவகை இருப்பிடமே — போற்றி போற்றி!**

26. ஸம்ஸாராம்புதி நிர்மக்னதாரகாய — நமோ நம:

**பிறவிக்கடல் நின்று கரையேற்று மாலுமியே — போற்றி போற்றி!**

27. மஸ்தகோல்லாஸி ருத்ராக்ஷமகுடாய — நமோ நம:

**சீராடும் சிவமணிச் (உத்திராட்ச)சென்னியனே — போற்றி போற்றி!**

28. ஸாக்ஷாத்பரசிவாமோக தர்சநாய — நமோ நம:

**கண்கூடாய் வந்ததிரு பரசிவனே — போற்றி போற்றி!**

29. சக்ஷுர்கத மஹாதேஜோத்யுஜ்வலாய — நமோ நம:

**இருகண்பால் துலங்கிடும் பெருஞ்ஜோதியே — போற்றி போற்றி!**

30. ஸாக்ஷாத்ருத ஜகன்மாத்ரு ஸ்வரூபாய — நமோ நம:

**காமாட்சி காட்சிபெற்ற பெருமுனியே — போற்றி போற்றி!**

31. க்வசித்பாலஜநாத்யந்தஸுலபாய — நமோ நம:

**சிறியோர்க்கும் எளியோர்க்கும் எளியவனே — போற்றி போற்றி!**

32. க்வசின் மஹாஜநாதீவ துஷ்ப்ராபாய — நமோ நம:

**பெரியோருக்கும் கிட்டாத பெருநிதியே — போற்றி போற்றி!**

33. கோப்ராம்ண ஹிதாஸக்த மாநஸாய — நமோ நம:
**கோமாதா வேதியர்பால் நலம் நினைப்பாய் — போற்றி போற்றி!**

34. குருமண்டல ஸம்பாவ்ய விதேஹாய — நமோ நம:
**குருமண்டலம் கொண்டாடும் குணநிதியே — போற்றி போற்றி!**

35. பாவநாமாத்ர ஸந்துஷ்ட ஹ்ருதாயாய — நமோ நம:
**நன்மனத்தோர் நலம் நல்கும் நல்லவனே — போற்றி போற்றி!**

36. பாவ்யாத்ய பாவ்யதிவ்ய ஸ்ரீபதாப்ஜாய — நமோ நம:
**முழுமுதற்கண் உன் அடியே வணங்குவோம் — போற்றி போற்றி!**

37. வ்யக்தாவ்யக்ததராநேக சித்கலாய — நமோ நம:
**புரியாத தத்துவமும் புலப்படுமே — போற்றி போற்றி!**

38. ரக்தசுக்லப்ரபாமிச்ர பாதுகாய — நமோ நம:
**செவ்வியுடன் தூயதிருமரவடியாய் — போற்றி போற்றி!**

39. பக்தமானஸ ராஜீவ பவநாய — நமோ நம:
**அடியவர் மன மனையில் நிலைத்தவா — போற்றி போற்றி!**

40. பக்தலோசன ராஜீவ பாஸ்கராய — நமோ நம:
**பக்தர் கண்மலர் மலர்த்தும் பகலவனே — போற்றி போற்றி!**

41. பக்த காமலதா கல்பபாதபாய — நமோ நம:
**அடியார்கள் மனம் மகிழும் கல்பகமே — போற்றி போற்றி!**

42. புக்திமுக்தி ப்ரதாநேக சக்திதாய — நமோ நம:
**போகமோக்ஷ பெரும்பேறு பகிர்ந்திடுவாய் — போற்றி போற்றி!**

43. சரணாகத தீநார்த்த ரக்ஷகாய — நமோ நம:
**சரணடைந்த எளியோர்கள் துயர் தீர்ப்பாய் — போற்றி போற்றி!**

44. சமாதிஷ்டக ஸம்பத் ப்ரதாயகாய — நமோ நம:
**புலனடக்கம் போன்ற குணம் பகிர்ந்தளிப்பாய் — போற்றி போற்றி!**

45. ஸர்வதா ஸர்வதா லோக ஸௌக்யதாய — நமோ நம:
**எப்போதும் எல்லோர்க்கும் சுகமளிப்பாய் — போற்றி போற்றி!**

46. ஸதாநவநவாகாங்க்ஷ்ய தர்சனாய — நமோ நம:
**எப்போதும் புதுப்புதிதாய் காண்பவனே — போற்றி போற்றி!**

47. ஸர்வ ஹ்ருத் பத்ம ஸஞ்சார நிபுணாய — நமோ நம:
**எல்லோர் உளம் கவர்ந்து நிலைத்தவா — போற்றி போற்றி!**

48. ஸர்வேங்கித பரிஜ்ஞான ஸமர்த்தாய — நமோ நம:
**அடியார் குறிப்பறிந்த வித்தகனே — போற்றி போற்றி!**

49. ஸ்வப்னதர்சனபக்தேஷ்ட ஸித்திதாய — நமோ நம:
**கனவிலே காட்சியுடன் காத்திடுவாய் — போற்றி போற்றி!**

50. ஸர்வவஸ்து விபாவ்யாத்ம ஸத்ரூபாய — நமோ நம:
**எப்பொருள்தனிலும் விளங்கிடுவாய் — போற்றி போற்றி!**

51. தீனபக்தாவனை காந்ததீக்ஷிதாய — நமோ நம:
**எளியோரை காப்பதனில் காப்புடையாய் — போற்றி போற்றி!**

52. ஞானயோக பலைச்வர்யமாநிதாய — நமோ நம:
**ஞானபலம் யோகபலம் மிக்கவனே — போற்றி போற்றி!**

53. பாவமாதுர்யகலிதாபயதாய — நமோ நம:
**இனிய எண்ணம் நிறைந்தப் புகலிடமே — போற்றி போற்றி!**

54. ஸர்வபூத கணாமேய ஸௌஹார்தாய — நமோ நம:
**உயிரினங்கள் யாவினிலும் அன்புடையாய் — போற்றி போற்றி!**

55. மூகீபூதாநேக லோக வாக்ப்ரதாய நமோ நம:
**ஊமைகள் பலபேரை பேசவைத்தாய் போற்றி போற்றி!**

56. சீதளீக்ருத ஹ்ருத்தாப ஸேவகாய நமோ நம:
**அடியார்கள் உளத்தாபம் குளிர்விப்பாய் போற்றி போற்றி!**

57. போகமோக்ஷப்ரதானேக யோகக்ஞாய நமோ நம:
**யோக மோட்சம் அளிப்பதிலே திறனுடையாய் போற்றி போற்றி!**

58. சீக்ர ஸித்திகரானேக சிக்ஷணாய நமோ நம:
**பயன் அளிக்கும் நற்பயிற்சி நல்குவாய் போற்றி போற்றி!**

59. அமாநித்வாதி முக்யார்த்த ஸித்திதாய நமோ நம:
**அடக்கம் போல் நற்குணங்கள் தந்திடுவாய் போற்றி போற்றி!**

60. அகண்டைகரஸாநந்த ப்ரபோதாய நமோ நம:
**குறைவற்ற கருணானந்த பெருநிதியே போற்றி போற்றி!**

61. நித்யாநித்ய விவேக ப்ரதாயகாய நமோ நம:
**நிலையான பகுத்தறிவை பேணுபவா போற்றி போற்றி!**

62. ப்ரத்யகேகரஸாகண்ட சித்ஸுகாய நமோ நம:
**உட்புறமாம் ஞானசுகம் நிறைந்தவனே போற்றி போற்றி!**

63. இஹாமுத்ரார்த்த வைராக்ய ஸித்திதாய நமோ நம:
**எப்பொருள் கண் பற்றற்ற நிலைதருவாய் போற்றி போற்றி!**

64. மஹாமோஹ நிவ்ருத்யர்த்த மந்த்ரதாய நமோ நம:
**உலகிலே பெருமயக்கம் போக்கிடுவாய் போற்றி போற்றி!**

65. க்ஷேத்ர க்ஷேத்ரக்ஞ ப்ரத்யேக த்ருஷ்டிதாய நமோ நம:
**உடல் ஆவி பகுத்தறிவு நல்குவாய் போற்றி போற்றி!**

66. க்ஷயவ்ருத்தி விஹீனாத்ம ஸௌக்யதாய நமோ நம:
**தொய்வற்ற ஆன்மசுக பெருநிதியே போற்றி போற்றி!**

67. தூலாக்ஞான விஹீநாத்ம த்ருப்திதாய நமோ நம:
**அவிவேகம் வெளிப்பொருளில் போக்கிடுவாய் போற்றி போற்றி!**

68. மூலாக்ஞான பாதிதாத்ம முக்திதாய நமோ நம:
**ஆழ்உள்ளத்து அவிவேகம் நீக்குவாய் போற்றி போற்றி!**

69. ப்ராந்திமேகோச்சாடன ப்ரபஞ்ஜநாய நமோ நம:
**பெரும்புயலாய் அறியாமை அகற்றிடுவாய் போற்றி போற்றி!**

70. சாந்திவ்ருஷ்டிப்ரதாமோக ஜலதாய நமோ நம:
**அமைதிமழைப் பொழிந்திடும் பெருமுகிலே போற்றி போற்றி!**

71. ஏககாலக்ருதாநேக தர்சநாய நமோ நம:
**பற்பலவாம் சாத்திரமும் அறிந்தவனே போற்றி போற்றி!**

72. ஏகாந்த பக்த ஸம்வேத்ய ஸ்வகதாய நமோ நம:
**அடியார்கள் அறிந்திடும் நன்நடத்தையனே போற்றி போற்றி!**

73. ஸ்ரீசக்ரரத நிர்மாண ஸுப்ரதாய நமோ நம:
**ஸ்ரீசக்ர திருப்பலியில் பேரார்வா போற்றி போற்றி!**

74. ஸ்ரீ கல்யாணதராமேய ஸுச்லோகாய நமோ நம:
**நலம் நல்கும் புனிதமிகு புகழாளா போற்றி போற்றி!**

75. ஆச்ரிதாச்ரயணீயத்வ ப்ராபகாய நமோ நம:
**தஞ்சம் என்றோரை காத்திடுவாய் போற்றி போற்றி!**

76. அகிலாண்டேச்வரீ கர்ணபூஷகாய நமோ நம:
**அகிலாண்டேச்வரித்தோடு அணிவித்தாய் போற்றி போற்றி!**

77. ஸசிஷ்யகண யாத்ரா விதாயகாய நமோ நம:
**சீடர் புடைசூழ் புனித பயணத்தாய் போற்றி போற்றி!**

78. ஸாதுஸங்கநுதாமேய சரணாய நமோ நம:
**அடியார்குழாம் சரண் அடையும் திருவடியாய் போற்றி போற்றி!**

79. அபின்னாத் மைத்க்ய விஞ்ஞானப்ரபோதாய நமோ நம:
**அத்வைதம் எனும் தத்துவம் நிலைநிற்பாய் போற்றி போற்றி!**

80. பின்ன பின்னமதைஸ்சாபி பூஜிதாய நமோ நம:
**பல்வேறு மதம் மதித்து போற்றியவா போற்றி போற்றி!**

81. தத்தத்விபாக ஸத்தோததாயகாய நமோ நம:
**அவரவர்கேற்றபடி நன்று உரைப்பாய் போற்றி போற்றி!**

82. தத்தத் பாஷாப்ரகடித ஸ்வகீதாய நமோ நம:
**பலமொழியில் மொழிப்பெயர்த்த பாட்டுடையாய் போற்றி போற்றி!**

83. தத்ரதத்ரக்ருதானேக ஸத்கார்யாய நமோ நம:
**ஆங்காங்கு பற்பல நற்செயல் புரிந்தாய் போற்றி போற்றி!**

84. சித்ரசித்ர ப்ரபாவ ப்ரஸித்திகாய நமோ நம:
**பற்பலவாம் சித்துமிக திறமையனே போற்றி போற்றி!**

85. லோகானுக்ரஹ க்ருத்கர்ம நிஷ்டிதாய நமோ நம:
**உலகே பின்பற்றும் நடத்தையனே போற்றி போற்றி!**

86. லோகோ த்ருதிமஹ்பூரி நியமாய நமோ நம:
**உலகுய்ய பல நியமம் கடைபிடித்தாய் போற்றி போற்றி!**

87. ஸர்வ வேதாந்த ஸித்தாந்த ஸம்மதாய நமோ நம:
**வேதாந்தம் யாவையுமே ஏற்றாய் நீ போற்றி போற்றி!**

88. கர்மப்ரஹ்மாத்மகரண மர்மஞாய நமோ நம:
**கர்மங்கள் கடவுள் இருநுட்பம் அறிந்தவா போற்றி போற்றி!**

89. வர்ணாச்ரம ஸதாசார ரக்ஷகாய நமோ நம:
**அவரவர்கள் நல்லொழுக்கம் காப்பவனே போற்றி போற்றி!**

90. தர்மார்த்த காம மோக்ஷப்ரதாயகாய நமோ நம:
**அறம் பொருள் இன்பம் பல நல்குவாய் போற்றி போற்றி!**

91. பதவாக்ய ப்ரமாணாதி பாரீணாய நமோ நம:
**பற்பலவாம் சாத்திரமும் நன்கறிவாய் போற்றி போற்றி!**

92. பாதமூலநதாநேக பண்டிதாய நமோ நம:
**புலவர் பலர் பற்றுகிறத் திருவடியாய் போற்றி போற்றி!**

93. வேத சாஸ்த்ரார்த்த ஸத்கோஷ்டி விலாஸாய நமோ நம:
**சாத்திரத்தை எப்போதும் ஆராய்வாய் போற்றி போற்றி!**

94. வேத சாஸ்த்ரபுராணாதி விசாராய நமோ நம:
**வேதநூல் யாவையும் நன்குணர்ந்தாய் போற்றி போற்றி!**

95. வேத வேதாங்க தத்த்வப்ரபோதகாய நமோ நம:
**வேதமுறை பின்பற்றி போதிப்பாய் போற்றி போற்றி!**

96. வேத மார்கப்ரமாண ப்ரக்யாபகாய நமோ நம:
**வேதவழி நிலைத்திடவே முயற்சித்தாய் போற்றி போற்றி!**

97. நிர்ணித்ர தேஜோவிஜித நித்ராத்யாய நமோ நம:
**துயில் வென்றாய் மதிமயக்க வென்றவா போற்றி போற்றி!**

98. நிரந்தர மஹாநந்த ஸம்பூர்ணாய நமோ நம:
**நிலையான பெருமகிழ்வு நிறைந்தவனே போற்றி போற்றி!**

99. ஸ்வபாவ மதுரோதார காம்பீர்யாய நமோ நம:

**இனிமையும் நல் உயர்வும் ஒருங்கிணைந்தாய் போற்றி போற்றி!**

100. ஸஹஜாநந்த ஸம்பூர்ண ஸாகராய நமோ நம:

**ஆன்மநிலை உலகியலும் நிலைத்தவா போற்றி போற்றி!**

101. நாதபிந்துகலாதீத வைபவாய நமோ நம:

**நாதபிந்து கலை அறிந்த பெருமையாய் போற்றி போற்றி!**

102. வாதபேத விஹீநாத்ம போததாய நமோ நம:

**வாதத்திற்கு எப்போதும் சிக்காதவனே போற்றி போற்றி!**

103. த்வாதசாந்த மஹாபீட நிஷண்ணாய நமோ நம:

**உயர்நிலையாம் அரியணையில் அமர்ந்தவனே போற்றி போற்றி!**

104. தேசகாலாபரிச்சின்ன த்ருக்ரூபாய நமோ நம:

**தேச காலங்களை கடந்த தத்துவமே போற்றி போற்றி!**

105. நிர்மான சாந்திமஹித நிஸ்சலாய நமோ நம:

**ஞானநிலை பெற்றதனின் நிலைநின்றாய் போற்றி போற்றி!**

106. நிர்லக்ஷ்ய லக்ஷ்யஸம்லக்ஷ்ய நிர்லேபாய நமோ நம:

**நிலையான தன்நிலையில் நிற்பவனே போற்றி போற்றி!**

107. ஸ்ரீ ஷோடசாந்த கமல ஸுஸ்திதாய நமோ நம:

**பதினாறு கலைக்கமலம் வீற்றிருப்பாய் போற்றி போற்றி!**

108. ஸ்ரீ சந்த்ரசேகரந்த்ர ஸ்ரீ ஸரஸ்வத்யை நமோ நம:

**ஸ்ரீ சந்திரசேரேந்திர சரஸ்வதியே போற்றி போற்றி!**

**மஹாஸ்வாமி பாத அஷ்டோத்தர சதநாமவளி**

**ஸம்பூர்ணம்**